**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்</u>**.

முன்னிலை- **திருமதி. செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி.

<u>(திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ, வருடம் ஆனி மாதம் 03ஆம் நாள்)</u>

2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள், 17-ஆம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 115/2018</u>**

## <u>CNR No.TNTM16-000810-2018</u>

வள்ளியம்மாள் ....வாதி

... எதிராக ...

1. வள்ளியம்மாள்
2. நடராஜன்
3. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்
   வட்டார வளர்ச்சி அலுவலகம், வந்தவாசி .....பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 08.06.2026 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N. இராமன், அவர்கள் ஆஜராகியும், 1-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஐசக்நியூட்டன் ஆஜராகியும் மற்றும் 3-ஆம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் முன்னிலையானபோதிலும் 1, 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யததால் தோன்ற தரப்பினராக கருதப்பட்டும் மேலும் 2-ஆம் பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக தவறிய காரணத்தால் 2-ம் பிரதிவாதியும் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டும் வாதியின் வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கு தாவா சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளோ அல்லது அவரகளது ஆட்களோ அல்லது அவர்களின் முகவர்களோ வாதியின்

அமைதியான அனுபவத்தை தடுக்கும் விதமாக எவரும் எக்காலத்திலும் அத்துமீறி கடக்கால் போடகூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பிறபிக்க வேண்டியும், தாவா சொத்தினை நீதிமன்ற ஆணையர் அளந்து அத்துகாட்டும் வரை 1ம் பிரதிவாதியின் பெயருக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட தொகுப்பு வீட்டினை கட்டுவதற்கு வேலை உத்தரவினை நிறுத்தி வைக்க 3-ஆம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு நிரந்தர தடையுறுத்து கட்டளை பிறப்பிக்க கோரியும், இன்னும் தாவா செலவு தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்தகோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 02. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :</u> -

வாதி தெரிவித்து கொள்வது யாதெனில், தாவா சொத்தானது வாதிக்கு வந்தவாசி வட்டாட்சியரால் 2007 ஆம் ஆண்டு வழங்கபட்ட கிராம நத்தம் வீட்டுமனை என்றும், மேற்படி கிராமத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் வீடு கட்டி இன்று வரை எவ்வித இடையூறுமின்றி வாழ்ந்து வருவதாகவும், இந்நிலையில் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் கடந்த இரண்டு மாதங்களாக 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள் தாவா சொத்தில் 3 அடிக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டுவதற்க்கு கடக்கால் போட முயற்சி மேற்கொண்டு சட்ட முரணான செயல்களில் ஈடுபட்டு வருவதை ஊர் பெரியவர்கள் மற்றும் பஞ்சாயத்தார் துணையுடன் 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளின் அடாவடியான செயலை வாதி தடுத்து நிறுத்திவிட்டதாகவும், இருந்தும் மீண்டும் மீண்டும் வாதிக்கு பாத்தியபட்ட தாவா சொத்தில் 3 அடிக்கு மேல் அத்து மீறி ஆக்கிரமிப்பு செய்து 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வாதியின் வீட்டுமனையில் கடக்கால்(Basement) போடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டதை ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் தீர்க்க வேண்டுமென கோரியதற்க்கு அதற்கு 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள் கட்டுபடாமல் 3-ம் பிரதிவாதியான வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் 1-ஆம் பிரதிவாதியின் பெயருக்கு வழங்கபட்ட அரசு

தொகுப்பு வீட்டினை கட்டுவதற்கு கடக்கால் போட மீண்டும் முயற்சி செய்ததை வாதி தடுக்க முற்பட்டபோது வாதி பெண் என்றும் பாராமல் 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள் மற்றும் அவருடன் 10-க்கும் மேற்பட்ட நபர்கள் வந்து வாதியை அடித்துவிட்டு சென்றுவிட்டதாகவும், தற்போது மீண்டும் மீண்டும் வாதிக்கு பாத்தியபட்ட தாவா சொத்தில் 3 அடிக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்து கடக்கால் போட்டு வருவதாகவும், வாதியும் அவரது ஆட்களும் சேர்ந்து தடுக்க முற்பட்டும் அதனை 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள் தன்னுடைய பண பலத்தினையும் படை பலத்தினையும் பயன்படுத்தி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதியின் அமைதியான அனுபவத்தை தொடர்ந்து கெடுத்து வருவதாகவும், இந்நிலையில் தாவா சொத்தில் பிரதிவாதி கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து அதில் தன்னுடைய வீட்டுமனையுடன் சேர்த்து வீடு கட்ட முயற்சி செய்து அதனை வாதியானவர் உடனடியாக ஊர் பெரியவர்கள் மற்றும் பஞ்சாயத்தார் துணையுடன் சென்று தடுத்து நிறுத்தியதாகவும், ஆகவே வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்து மீறி நுழைந்து தன்னுடைய வீட்டுமனையுடன் சேர்த்து வீடு கட்ட முயற்சி செய்தது மட்டுமில்லாமல் வாதியை ஆட்கள் வைத்து மிரட்டவும் செய்ததில் வாதி பெண் என்பதால் பிரதிவாதிகளின் மிரட்டலுக்கு பயந்துகொண்டு வந்துவிட்டதாகவும், ஆகவே மேற்படி பிரதிவாதிகள் சட்டத்திற்கு கட்டுபடாதவர் மிகுந்த படைபலமும், பணபலமும் கொண்டவர்கள் என்பதால் மீண்டும் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதியின் அமைதியான அனுபவத்தை தொடர்ந்து கெடுத்து வருவதால் அதனை மாண்பமை நீதிமன்றதிதின் தடை உத்திரவால் மட்டுமே 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளின் சட்டத்திற்க்கு புறம்மான செயலை தடுத்து நிறுத்த முடியும், என்றும் எனவே தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ அத்துமீறி நுழைந்து கடக்கால் போடுவதை தடுக்க 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதகளுக்கெதிராக ஒரு நிரந்தர தடை உத்திரவு கோரியும் மேலும் மேற்படி தாவா சொத்து நீதிமன்ற ஆணையாளர் அளந்து வழங்கபட்ட தொகுப்பு

வீட்டினை கட்டுவதற்கான லேலை உத்தரவினை நிறுத்தி வைக்க 3-ஆம் பிரதிவாதிக்கு ஒரு நிரந்தர தடை உத்தரவினை பிறப்பிக்க வேண்டி வழக்கு வாதியால் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

03. இவ்வழக்கில் 1, 3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யததால் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும் மேலும் 2-ஆம் பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக தவறிய காரணத்தால் 1-ம் பிரதிவாதியும் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

04. இவ்வழக்கு வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, அவரின் மூலம் வா.த.சா.ஆ.1, வா.த.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**05. வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.**

06. <u>தீர்வு</u>

வாதி தரப்பு வழக்கானது, தாவா சொத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதியோ அல்லது அவரகளது ஆட்களோ அல்லது அவர்களின் முகவர்களோ வாதியின் அமைதியான அனுபவத்தை தடுக்கும் விதமாக எவரும் எக்காலத்திலும் அத்துமீறி கடக்கால் போடகூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பிறபிக்க வேண்டியும், தாவா சொத்தினை நீதிமன்ற ஆணையர் அளந்து அத்துகாட்டும் வரை 1ம் பிரதிவாதியின் பெயருக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட தொகுப்பு வீட்டினை கட்டுவதற்கு வேலை உத்தரவினை நிறுத்தி வைக்க 3-ஆம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு நிரந்தர தடையுத்தர கோரியும், இன்னும் தாவா செலவு தொகையை 1,2 பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்தகோரியும், இதர பரிகாரங்களுக்காகவும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து வாதிக்கு வந்தவாசி வட்டாட்சியரால் கடந்த

2007ம் ஆண்டு வழங்கப்பட்ட கிரமநத்த வீட்டுமனையாகும் மேற்படி சொத்தில் வாதி வீடுகட்டி எவ்வித இடையூறும் இன்றி அனுபவித்து வருகிறார் என்றும் கடந்த இரண்டு மாதங்களாக 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் 3 அடிக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்ட கடகால் போட முயற்சித்ததாகவும் அதை வாதி பஞ்சாயத்தார் துணையுடன் தடுத்து நிறுத்தியதாகவும், மீண்டும் மீண்டும் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் 3 அடிக்கு மேல் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து 1, 2 பிரதிவாதிகள் கடகால் போட முயற்சி செய்ததை மீண்டும் வாதி ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் தீர்க்கவேண்டியதும் எனக்கோரியதற்கு அதற்கு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் கட்டுபடாமல் 3ம் பிரதிவாதியால் 1-ஆம் பிரதிவாதி பெயருக்கு வழங்கப்பட்ட அரசு தொகுப்பு வீட்டினை கட்டுவதற்கு கடக்கால் போட மீண்டும் முயற்சித்ததை வாதி தடுக்க முற்பட்டப்போது வாதியை பெண் என்றும் பாரமல் பிரதிவாதிகள் அடித்து சென்றுவிட்டனர் என்றும் பிரதிவாதி கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து அதில் தன்னுடைய வீட்டுமனையுடன் சேர்த்து வீடு கட்ட முயற்சி செய்ததாகவும் அதனை வாதி தடுத்துவிட்டதாகவும், எனவே தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி கடக்கால் போட முயற்சிப்பார் என்னபதால் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்ககோரியும், 3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு நிரந்தர தடையுத்தரவு பிறப்பிக்ககோரியும் வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 விசாரித்து, வா.சா.1-ன் மூலமாக வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த 2007 ம் ஆண்டு வந்தவாசி வட்டாட்சியரால் வாதி பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா அசல் வா.த.சா.ஆ. 1 ஆகவும், 2017 மற்றும் 2018ம் ஆண்டிற்கான வாதி பெயரில் உள்ள வீட்டுவரி இரசீது அசல் வா.த.சா.ஆ. 2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும் வாதி தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணம் மூலம் தனது வழக்கை நிரூபித்துள்ளதாகவும்

கூறி சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதியின் அனுபவதித்தில் உள்ள சொத்துக்களில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து கடகால் போட முயற்சி செய்ததாகவும் வாதி பஞ்சாயத்தார் முன்னிலையில் தடுத்து நிறுத்திவிட்டார் என்றும் மீண்டும் பிரதிவாதிகளால் வாதியின் அமைதியான அனுபவத்திற்கு தடைசெய்ய வாய்ப்பு உள்ளது என்றும் எனவே 1,2 பிரதிவாதிகள் மீது நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதி தனது வழக்கை உரிய சாட்சி சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்றும் எனவே வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகவேண்டுமென்று வாதிட்டார்.

8. தற்போது இவ்வழக்கில் வாதி தனது வழக்கை நிறுபித்துள்ளாரா? என பார்க்கும்போது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலணை செய்து பார்க்கும்போது தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பது வா.த.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும் தாவா சொத்துக்களில் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வாதி அனுபவத்தில் இருந்துள்ளார் என்பது வா.த.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது மேலும் இவ்வழக்கில் வாதி கேட்டுள்ள இரண்டாவது பரிகாரமான தாவா சொத்தினை நீதிமன்ற ஆணையாளர் அளந்து அத்துகாட்டும் வரை 1ம் பிரதிவாதியின் பெயருக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட தொகுப்பு வீட்டினை கட்டுவதற்கான வேலை உத்தரவினை நிறுத்தி வைக்க 3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு நிரந்தர தடையுத்தரவினை பிரப்பிக்ககோரி பரிகாரம் கேட்டுள்ளார். வழக்கு கோப்புக்களை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்ததில் வாதி வழக்கு தாக்கல் செய்த போது நீதிமன்ற ஆணையர் நியமனம் கேட்டு வழக்கிடை மனு எண்.451/2018 மனுவினை தாக்கல் செய்துள்ளார் மேற்படி மனுவினை கடந்த 09.02.2022 அன்று இம்மனுவினை வலியுறுத்த போவதில்லை என மேல்ஒப்பம்

(Endorsement) செய்துள்ளார். மேலும் அரசு அதிகாரிக்கு எதிராக ஒரு செயலை செய்யக்கூடாது என நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோர முடியாது. எனவே வாதி கோரிய இரண்டாவது பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது அல்ல என தீர்வு கண்டும், தாவா சொத்து வாதிக்கு உரிமையானது என்பதும், வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தில் வாதி அமைதியான அனுபவத்தில் இருந்துள்ளார் என்பதும் வாதி தகுந்த சாட்சி மற்றம் சான்றாவணம் மூலம் நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் கருதி வாதியின் அமைதியான அனுபவத்தில் 1,2 பிரதிவாதிகள் தடைசெய்யும் வகையில் வாதியின் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து எவ்வித கடக்காலும் போட முயற்சிக்க கூடாது என வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றும் இரண்டாவது பரிகாரத்தை பொறுத்து இவ்வழக்கு பகுதியாக தள்ளுபடி செய்தும் இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு தீர்வு கண்டு அவ்வாறே முடிவு செய்கின்றது.

**9.இறுதியாக,**

1. அசல் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2. வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை 1,2 பிரதிவாதிகளோ அல்லது அவர்கள் ஆட்களோ வாதியின் அமைதியான அனுபவத்தை தடுக்கும்விதமாக வாதியின் சொத்தில் அத்துமீறி கடக்கால் போடக்கூடாது என 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர தடையுறுத்து கட்டளை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

3. வாதி கோரிய இரண்டாவது பரிகாரத்தை பொருத்து இவ்வழக்கு பகுதியாக தள்ளுபடி செய்யப்படுகிறது.

4. தாவா செலவு தொகையை 1,2 பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்தவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 17ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.06.17 05:13:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.

**வாதி தரப்பு சாட்சிகள்**

1. வா.சா.1. வள்ளியம்மாள் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** -

| வ. எண் | சான்றாவணங்களின் எண்ணிக்கை | தேதி | விவரம் | ஷரா |
|---|---|---|---|---|
| 1. | வா.த.சா.ஆ.1 | - | வாதியின் பெயருக்கு2007ம் ஆண்டு வந்தவாசி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா | அசல் |
| 2. | வா.த.சா.ஆ.2 | - | வாதியின் பெயரில் உள்ள வீட்டு வரி இரசீது | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** - இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** - இல்லை

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.06.17 05:14:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.